உ

கணபதி துணை.

சிதம்பரம்

குருநமச்சிவாயசுவாமிகள்

அருளிச்செய்த

திருவண்ணாமலைவெண்பா.

இஃது,

திருவண்ணாமலை

அருணாசலவையரால்

பரிசோதிக்கப்பட்டு

கொண்ணூர்

மாணிக்கமுதலியார்


அவர்களால்

தமது

மநோன்மணிவிலாச அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது

பவ ௵ புரட்டாசிமீ



கணபதிதுணை.

குருநமச்சிவாய ரருளிச்செய்த

அண்ணாமலைவெண்பா.

ஆதிநடமாடுமலை யன்றிருவர்தேடுமலை
சோதிமதியாடரவஞ் சூடுமலை—நீதி
தழைக்குமலைஞானத்தபோதனரைவாவென்
றழைக்குமலையண்ணாமலை. (௧)

அன்பர்பிறப்பையகற்றுமலையன்பரல்லா
வன்பர்பிறப்பைவளர்க்குமலை—யன்பை
வடிக்குமலைசிங்கத்தைவந்தசிப்புளாகி
படிக்குமலையண்ணாமலை. (௨)

கூற்றையுதைத்தமலைகோமாறன்கூடல்வையை
பாற்றையடைந்தமலையாரூரன்—போற்றற்
சிறந்தமலைதீவினையேன் செய்தகுறையெல்லா
மறந்தமலையண்ணாமலை. (௩)

ஏழைக்கிரங்குமலையேதேதுகேட்டாலும்
கோழைப்படாமற்கொடுக்குமலை—வேழ
முரித்தமலையம்மைக்கொருபாகமீந்த
மருத்துமலையண்ணாமலை. (௪)

கண்டங்கரியமலைகண்மூன்றுடையமலை [ருக்குத்
யண்டரெல்லாம்போற்றக் கரியமலை—தொண்ட
தோற்றுமலைநாளுந்தொழுவோரெழுபிறப்பை
மாற்றுமலையண்ணாமலை. (௫)

அன்னமுடன்சொர்ணமளிக்குமலையாதரிப்போ
ருன்னுவரமெல்லாமுதவுமலை—துன்னுபுகழ்
கொண்டமலையங்கிக்கொழுந்தாகியண்டமுற
மண்டுமலையண்ணாமலை. (௬)

மாமாதவநமச்சிவாயன்தினமொருவெண்
பாமாலைசாத்திப்பணியுமலை—காமாதி
யென்னுமலைதான்கடந்தோரின்பத்திருவுளத்தே
மன்னுமலையண்ணாமலை (௭)

அஞ்சக்கரமாயமர்ந்தமலையாதரிப்போர்
வஞ்சக்கருவினையைமாற்றுமலை—நெஞ்சைத்
திருத்துமலைமெய்ஞ்ஞானசித்திதருந்தெய்வ
மருத்துமலையண்ணாமலை. (௮)

தொண்டர்வலமாகச்சூழுமலைசூழுமவர்
பண்டவினையெல்லாம்பறிக்குமலை—யண்ட
முருவுமலையெந்தைகுருவே நமச்சிவாயன்
மருவுமலையண்ணாமலை. (௯)

கொம்பனையபேதைக்குறமகளிர்வானிலுற்
மம்புலியினோடுவிளையாடுமலை—செம்பவள
மொத்தமலைசர்க்குருவாயொண்கழலென்சென்னி
மாற்றுமலையண்ணாமலை. [யின்மேல்

ஞானகுருநாதனமச்சிவாயன்கருணை
யானபரனாகியெனையாண்டமலை—வானவர்கள்
போற்றுமலைதீவினைப்பேய்ப்புந்திக்கவலையெல்லா
மாற்றுமலையண்ணாமலை. (௧௧)

சரணகமலந்தனைப்புகழுந்தொண்டர்
மரணபவத்துயரமாறக்—கருணை
பொழியுமலைகட்டுப்பழகுபணிநீரே
வழியுமலையண்ணாமலை. (௧௨)

அன்பர்கருத்திலனவரதமேவுமலை
துன்பமகலத்துரத்துமலை—இன்பம்
விளக்குமலைசெம்பொன்மகமேருவினைவில்லா
வளைக்குமலையண்ணாமலை. (௧௩

நண்பாக்குகையிநமச்சிவாயன்கருத்தில்
வெண்பாப்பயிராய்விளையுமலை—திண்பா
ரளந்தமலை செஞ்சுடராயன்றிருவர்தேட
வளர்ந்தமலையண்ணாமலை. (கச)

சீதமலரோனெடுமாறேடுமலையன்பருக்குப்
பாதமலர்வீடாய்ப்பலிக்குமலை—மாதவர்கண்
மொய்த்தமலையுண்ணாமுலையுமையைப்பாகத்தில்
வைத்தமலையண்ணாமலை. (கரு)

வைத்தநிதியோனமச்சிவாயகுருநாடோறு
மெய்த்தமிழிற்புகழ்ந்துமேவுமலை யெத்திசை
யின்னுமலைமாதுடனே வெள்ளிமலைவீடாக [யு
பான்னுமலையண்ணாமலை. (கசு)

முக்கோணமாகமுளைத்தமலைமூண்டகன்மா
லக்கோடுநாகமணிந்தமலை—திக்கோடு
துன்னுமலைத்தன்னைத் துதிக்குமடியாருளத்தின்
மன்னுமலையண்ணாமலை. (கஎ)

வண்டமிழாலோநமச்சிவாயகுருவேத்துமலை
கண்டுதொழுவார்க்கினியகாட்சிமலை · பண்டமுற
நீறுமலைபோற்றினினைக்குமடியாருளத்தே
யாறுமலையண்ணாமலை. (கஅ)

அஞ்செழுத்தாய்வேதமாயாகமமாய்நின்றமலை
விஞ்செழுத்தாயொன்றாய்விளங்குமலை-நெஞ்சக
த்தே, தைத்தமலைநாயேனைத்தன்னடியார்கூட்டத்
தில், வைத்தமலையண்ணாமலை. (௧௯)

மன்னுமோநமச்சிவாயவருசெந்தமிழாற்
பன்னுமேத்திப்பணியுமலை—யெந்நாளு
மெய்க்குமலைபொல்லாவினையேனைத்தன்னடிக்கீழ்
வைக்குமலைபண்ணாமலை (௨௰)

எந்தைகுருநாதனிருக்குமலையென்பாச
பந்தமறநோக்கிப்பரித்தமலை—சந்திரனைத்
தேய்த்தமலைநாயடியேன்சிந்திக்குஞ்சிந்தனைக்கே
வாய்த்தமலையண்ணாமலை. (௨௧

அஞ்ஞானக்கங்குலகற்றுமலையன்பர்க்கு
மெய்ஞ்ஞானச்சோதிவிளக்குமலை—சுஞ்ஞானச்
சந்தமலைநாயேற்குத்தந்தைதாய்சற்குருவாய்
வந்தமலையண்ணாமலை. (௨௨)

நீற்றையணிந்தமலைநீள்சுடராய்நின்றமலை
யேற்றைப்பரியாகவேறுமலை—கூற்றை
யுதைத்தமலையன்றரியையோர்சிம்புளாகி
வதைத்தமலையண்ணாமலை. (௨௩)

ஓலமிடுந்தேவர்குழாமுய்யத்திருமுடற்றி
லாலவிடந்தன்னையடக்குமலை—நாலுமறை
யந்தமலைநாயேனையாளக்குருவாகி
வந்தமலையண்ணாமலை. (உ௪)

ஆதிநெடுமாலயன்காணவன்றுபரஞ்
சோதிச்செழுஞ்சுடராய்த்தோன்றுமலை---வேத
முழங்குமலைசிந்திப்பார்முன்னின்றுமுத்தி
வழங்குமலையண்ணாமலை. (உ௫)

வந்துலகிலோதமச்சிவாயகுருவாயடியேன் [வினை
சிந்தைகுடிகொண்டிருக்குந்தெய்வமலை-முந்தை
நீக்குமலைசொல்லரிய நீள்பிறவித்துன்பமெல்லா
மாய்க்குமலையண்ணாமலை (உ௬)

சத்திக்கொருபாகந்தான்கொடுத்துநின்றமலை
முத்திக்குவித்தாய்முளைத்தமலை—யெத்திசையும்
போற்றுமலைபோற்றிப்புகழ்வாரெழுபிறப்பை
மாற்றுமலையண்ணாமலை (உ௭)

வாலமதியைமௌலியின்மேல்வைத்தமலை
சீலமுனிவோர்கள்செறியுமலை—காலங்
கடந்தமலைசீறிவருங்காலனைக்காலாலே
யடர்த்தமலையண்ணாமலை (உ௮)

சிட்டரிடருஞ்சிவநீதியில்லாத
துட்டர்சுகமுந் தடைக்குமலை—நட்டம்
பயிலுமலையெவ்வுலகும்பாழ்படுமென்றாலே
மயிலுமலையண்ணாமலை (உக)

கண்டமிருளக்கடுவிடத்தைவானவர்கா
யுண்டபிரானுதவுமலை—தொண்ட
ரிணங்குமலையாறேருமேறேரும்போற்றி
வணங்குமலையண்ணாமலை (௩௰)

துன்பப்பசிதீர்க்குஞ்சுத்தசிவஞான
வின்பப்பசுந்தேனிருக்குமலை - யன்பர்க்
கிருளுமலைவாராமலெப்போதுங்காட்சி
யருளுமலையண்ணாமலை (௩க)

செகமருவுமைம்புலனிற்சேராமன்ஞானச்
சுகமருவமேன்மைபுனைதொண்ட—ரகமருவுந்
தாயமலைவஞ்சகர்க்குத்தோன்றுமலே யொளிக்கு
மாயமலையண்ணாமலை (௩உ)

காத்திலிலிபகலைபொருளைத்தந்துஞ்
சிரத்திலடியிணையைச்சேர்த்தும்—பரத்தை
மிகத்தமலைவாராமலென்குருவாயாண்ட
மகத்துமலையண்ணாமலை (௩௩)

பற்றியிமையோர்பகைதெறுவான்வந்தெதிர்ந்த
வெற்றிமதராஜன்வேகவே—யுற்று
விழித்தமலைதக்கனார்வேள்விதனைமுன்னா
ளழித்தமலையண்ணாமலை. (௩௪)

பாடரனைவிரும்பிப்பாவலர்க்காகப்பரவை
வீடுதனக்கிருகால்மேவியே—கூட
விணக்குமலைதன்புகழைவெண்டிசைகடோறு
மணக்குமலையண்ணாமலை. (௩௫)

கற்றிக்குந்தேமாங்கனிபறித்துக்கார்க்கடுவன்
மற்றிக்குநல்கிமகிழுமலை—சிந்திக்கு
மெண்ணமலைவற்றோர்க்கினியமலையோராஞ்சு
வண்ணமலையண்ணாமலை. (௩௬)

உன்னுதவம்புரியுமோநமச்சிவாயகுரு
மன்னுங்கருணைமுகில்வாழுமலை—பொன்னம்
பெரியமலைமாலும்பிரமனுந்தேடற்
கரியமலையண்ணாமலை. (௩௭)

வேண்டுமயன்மால்விழிமனத்துக்கெட்டாம
னீண்டுதழற்பிழம்பாய்நின்றமலை—யாண்ட

கருணைமலையொப்புவோர்க்காணவரிதான
வருணைமலையண்ணாமலை. (௩௮)

வீடுமுதலாவிரும்பும்பொருளனைத்தும்
பாடுமடியார்க்குப்பலிக்குமலை — நீடுபுகழ்
பூண்டமலைசத்குருவாய்ப்பொல்லாச்சிறியேனை
யாண்டமலையண்ணாமலை. (௩௯)

அனைத்துலகும்போற்றுதிருவைந்தெழுத்தையோ
தித்,தனைத்தொழுதுபேணுந்தவத்தோர்- நினைத்த
வரம்,நல்குமலைபெற்றாருநல்லோருநன்னெறியு
மல்குமலையண்ணாமலை. (௪௰)

மானனையகண்ணார்வசமாகிநாயடியே
னூனவினைக்காட்டிழலாமல் — ஞானநெறி
காட்டுமலைதன்னைக்கருதுமடியாரிடரை
வாட்டுமலையண்ணாமலை. (௪௧)

பிள்ளையருந்துதவும்போரானையுவந்து
கொள்ளவயிரவமெய்க்கோலமாய் — மெள்ள
நடந்தமலைசிம்புளாய்நரசிங்கருடை
யடர்த்தமலையண்ணாமலை. (௪௨)

உய்யவாநந்தருளுமோநமச்சிவாயகுரு
வையமுழுதுந்துதிக்கவாழுமலை—துய்யவாற்
றேக்குமலைநல்லோர்செறியுமலைபெண்ணையா
றாக்குமலையண்ணாமலை. (௪௩)

உண்ணாமுலையாளொருபாகமாமலை
கண்ணாருதாயகாட்சிமலை—விண்ணோர்
துதிக்குமலையன்பர்தொழுதேத்திநாளு
மதிக்குமலையண்ணாமலை. (௪௪)

நாதனருளாளனமச்சிவாயன்கனிவச
யோதுதமிழ்மாலையுகந்தமலை—பாதிமதி
சூடுமலைபத்திசெயுந்தொண்டருடன்கூடிவிளை
யாடுமலையண்ணாமலை. (௪௫)

தேவரையுந் தவர்க்குத்தேவராய்ச்செப்புமொரு
மூவரையுமண்ணோர்முனிவரையும்—பாவரையும்
பெற்றமலைதன்பெருமைபேசுங்காற்றுய்தத்தை
யற்றமலையண்ணாமலை. (௪௬

நேசிக்குமன்பர்நினைவுகொடேபாவித்துப்
பூசிக்கும்பூசைபொருந்துமலை—யாசைக்குள்

வீழுமலைவற்றெழுநீர்தமெய்யடியார்நெஞ்சகத்தி
ல், வாழுமலையண்ணாமலை- (௪௭)

நன்றிபுனைநண்பனமச்சிவாயன்றினமுந்
துன்றுமலர்தூவித்துதிக்குமலை—பன்றிருவர்
தேடுமலைசற்சனமூற்றில்லைச்சிற்றம்பலத்தே
யாடுமலையண்ணாமலை. (௪௮)

நெஞ்சகத்திலென்றுநினைப்பார்க்குமாலறியாக்
கஞ்சமொத்தபொன்னடியைகாட்டுமலை-யஞ்செ
ழுத்தி,ஞமமலையம்பிகையுண்ணாமுலை யம்மைக்கு
கந்த,வாமமலையண்ணாமலை. (௪௯)

புன்றலையின்மாயன்புவியிடந்துங்காணரிய [ரு
நன்றிருப்பொன்னடியைநாடியேயென்றமோ
நாளுமலைவாராமனுயேனைச்சற்குருவா
யாளுமலையண்ணாமலை. (௫௰)

கண்டவிடத்தைச்சகமிறந்துபோகாமற்
கொண்டதிறம்பாடிக்கொண்டாடித் - தொண்டர்
பணியுமலைமெய்ம்முழுதும்பால்வெள்ளைநீறை
யணியுமலையண்ணாமலை. (௫௧)

தில்லைவனங்காசிதிருவாரூர்தென்மதுரை
நெல்லையினும்பேரொளியாய்நின்றமலை தொல்லை
பாடுமலைசந்ததமும்பத்தரகமேவிரட [மறை
மாடுமலையண்ணாமலை. (௫௨)

மூலமுதலண்ணாமலையென்றமன்பருக்குச்
சாலவரமீந்தருளுந்தாயென்று—நாலுமறை
பேசுமலைபாகம்பிரியாச்சிவஞான
வாசமலையண்ணாமலை. (௫௩)

தொன்மைதுறைச்சுந்தரற்காத் தூதுபோய்வந்த
மலை,நன்மைதனைத்தொண்டருக்குநல்குமலை-மன்
மதனைக் காய்ந்தமலைகூடலிற் சங்கத்தாருடன்றமி
ழை,யாய்ந்தமலையண்ணாமலை. (௫௪)

புண்டரிகன்மாறேடிப்பொன்முடியும் பொன்ன
டியுந்,கண்டறியவொண்ணாதகாட்சிமலை-தொண்ட
ருடை,யூனமலைபற்றறுக்கவேனமச்சிவாயகுரு
வானமலையண்ணாமலை. (௫௫)

குன்றமலைசோலைதொறுஞ்சூழுமலைசோலையுள
மன்றல்கமழுமதுமாரி—யென்றும்

பொழியுமலைமாறுமற்பூஞ்சுனைநீர்பொங்கி
லழியுமலையண்ணாமலை. (ருசு)

வேட்டவடியார்விளங்குஞ்சிவஞான
நாட்டம்பொழிபேரானந்தநீ—ராட்டக்
குளிக்குமலைநாளுங்குறைவில்லாச்செல்வ
மளிக்குமலையண்ணாமலை. (ருஎ)

நீலமலைதேடரி,நாய்நின்றமலைநின்றதழற்
கோலமலையன்றிற்குனிக்குமலை—மூலமலை
யத்தமலைசுந்தரற்காயன்பிரவிற்றூதுபோய்
வந்தமலையண்ணாமலை. (ருஅ)

தராவெலாமுய்யத் தனித்திருந்துசெய்யுங்
கரையிலாமாதவத்தைக்கண்டு—விரவியொரு
பாகமலைமாதுபெறப் பாலித்துநின்றருளு
மாகமலையண்ணாமலை (ருகூ)

கள்ளப்புலவேடர்கைவசமாகக்கனிந்து
தெள்ளித்தெளிந்தோர்செறிவாக—வுள்ளக்
கருத்துமலைபாதிருக்கக் காட்சிதருந்தெய்வ
மருத்துமலையண்ணாமலை. (சுய)

முக்குணமுமைம்புலனு மூளாவகையடக்கி
யொக்குமுணர்வாயிருப்போருள்ளத்தே-புக்குல
பாதமலைதாய்வயிற்றிற் பார்மீதில்வந்துபிற [வும்
வாதமலையண்ணாமலை (௬௧)

பண்ணுடுத்தகூடற்பழம்பதியிற்பிட்டமுதை
யுண்ணுடுத்துவைவறையுடையாமன்மண்ணெடுத்து
ப், போடுமலைசந்ததமும் பொன்னம்பலத்தினட
மாடுமலையண்ணாமலை. (௬௨)

அண்டமுழுதும்பறந்தேயன்னவுருவாய்த்தேடி
மண்டலமெலாங்கோலமாய்த்தேடிப்புண்டரிகன்
சீர்க்கமலைகோனறியாத் தெய்வச்சிவஞான |
மார்க்கமலையண்ணாமலை. (௬௩)

கூனற்சிறுபிறையைக்கோளரவுக்கஞ்சாமல்
வானப்பணிசடைமேல்வைத்தமலை—ஞானச்
சாதமலைபானந்தத் தாண்டவத்துக்கேற்ற
வாதமலையண்ணாமலை. (௬௪)

பொருந்துமலைச்சங்கப்புலவர்தமைப்போலே
விரிந்தபுகழ்க்கூடலிலேமேவி—யருந்தமிழை

யாய்ந்தமலைபார்மீதிலேந்தெழுந்தருளிவந்து
வாய்ந்தமலையண்ணாமலை. (கரு)

ஆதிமலையாதியநாதிமலையம்மையொரு
பாதிமலையோதிமறைபாடுமலை—நீதிமலை
தந்திரமலையந்திரமலைசாற்றியபஞ்சாக்கரமா
மந்திரமலையண்ணாமலை. (கசு)

அஞ்சுபுலனுமடக்கியறிவுடையோர்
வஞ்சவினைப்பிறவிமாயவே—நெஞ்சி
லழுத்துமலையன்பரனவரதம்போற்றி
வழுத்துமலையண்ணாமலை. (கஎ)

கதித்தமுனிபாலகன் மார்க்கண்டனையேசிறிப்
பதைத்துவருங்காலன்படவே—யுதைத்ததொரு
வீரமலைசற்குருவாய்மேவியெனையாண்டபட்ச
வாரமலையண்ணாமலை. (கஅ)

இமயவரும்பத்தருமாயேசுரருங்காணச்
சமயகுருவானந்திதாங்க—வுமையொருபங்
கானமலைவாக்குமனங்காயந்தமக்கரிய
வானமலையண்ணாமலை. (ககூ)

ஆத்திகடுக்கைமுதலானமலரைத்தெழுத்தாற்
சாத்தியடிவருந்தக்கோரு—மேத்திப்
புகழுமலையாங்கவரைப்பொற்கொடியோடெய்தி
மகிழுமலையண்ணாமலை (எ௰)

மாலூன்றிச்செய்புமணத்தைத்தசுந்தரனைக்
காலூன்றியாளக்கருணையாய்க்—கோலூன்றித்
தந்தவிருத்தசதுர்வேதியனாக
வந்தமலையண்ணாமலை. (எக)

ஆறுமதியுமணிமுடிமேற்கூடன்
மறுகுதனிலடியார்வாழ—விறகு
சுமந்தமலைபோற்றிசெயுந்தொண்டரகந்தோறு
மமர்ந்தமலையண்ணாமலை. (எஉ)

மட்டிலவுகஞ்சமலரோனுமாயோனுந்
திட்டமுடன்தேடித்திலைத்தானு—மெட்டரிய
ஞானமலைபார்மீது நாலுகத்தினுலுவடி
வானமலையண்ணாமலை. (எ௩)

மறைவடியாஞ்சோமாசிமாதன்மகடன்னி
லுறைவடிவாம்பங்கிலுமையோடு—நிறைவடிவர

யச்,செஃறமலையந்தணர்சூழ் தெய்வக்கனகமணி
மன்றமலையண்ணுமலை (எச)

எப்பொருளுமாகியிருசுடர்பாராகாய
மெய்ப்பொருளுமாகி விளங்குமலைகைப்பொரு
ளே,யொத்தமகியொன்றலைமேலோ நமச்சிவாயன
டி,வைத்தமலையண்ணுமலை. (எரு)

பல்லுயிருங்கேட்டறியப் பார்த்தன்கையாலடித்த
வில்லடியும்புத்தன்மிசவெறிந்த—கல்லெறியும்
பட்டமலைமன்மதனைப்பார்வையினல்வெந்துவிழ
வட்டமலைண்ணுமலை, (எசு)

வானையுருவவளர்ந்தமலைவாம்பச்சைத்
தேனையொருபாகத்திற்சேர்த்தமலை—யானை
யணித்திரள்சேர்சாரலதில்வேய்களீன்ற
மணித்திரள்சேரண்ணுமலை, (எஎ)

அன்றகயிலையரக்கனெடுத்தவப்போ
நின்றவனைக்காலானெரித்தமலை—யென்று
மருந்துமலையெவ்வுலகுமன்பரிடர்நோய்க்கு
மருந்துமலையண்ணுமலை. (எஅ)

அன்றயதிருவயதானமார்க்கண்டர்தமக்
கென்றுமீரெண்வயதேயென்றமலை—நின்று
சிறக்குமலைதன்னடியார்செய்தகுறையெல்லா
மறக்குமலையண்ணாமலை. (எகூ)

அன்றிருவர்தேடவனல் வடிவாய்நின்றமலை
நின்றுருகுந்தொண்டருக்குநேயமலை— யென்று
நடிக்குமலைவேள்வியிலே நாரணனையோட
வடிக்குமலையண்ணாமலை, (அ௰)

நஞ்சணியுங்கண்டமலைநாளுமடியவர்தம்
வஞ்சவினைதானறுக்கவந்தமலை—நெஞ்சை
யிளக்குமலையன்பர்க்கினியபேரின்பம்
வளர்க்குமலையண்ணாமலை. (அக)

பையரவஞ்சூடுமலைபத்தர்பணிந்தேற்றுமலை
கையின்மழுமான்றரித்தகாட்சிமலை—துய்ய
நதியணியும்வேணியின்மேனறுமலர்கொன்றை
மதியணியுமலையண்ணாமலை. (அஉ)

மயிலரவஞ்சேருமலைமான்புலிகள்கூடிப்
பயிலுமலைவானோர்பரவும்—கயிலை

பொருந்துமலையெற்நாளும் போற்றுமன்பர்நா
வா. லருந்துமலையண்ணாமலை. (௮௩)

உற்றப்புத்திரொருமூவர்தம்மைவைத்துப்
பற்றியெரிந்துவிழப்பார்த்தமலை—நத்தியே
நாளுந்தனைத்தேடிநம்புமடியார்தமையே
யாளுமலையண்ணாமலை. (௮௪)

உள்ளும்புறம்புமொருசெயலாமன்பருளங்
கொள்ளுமலைநாட்டங்குளிக்குமலை—தள்ளு
மெருத்தின்மேலேருமலையென்பிறவிநோய்க்கு
மருந்துமலையண்ணாமலை, (௮௫)

துன்பமகற்றுமலைதொல்வினையைநீக்குமலை
யன்பர்தமைவாவென்றழைக்குமலை — தன்பதத்
தைக், காட்டுமலைதன்னைக் கருத்திலிறுமன்பரிடர்
வாட்டுமலையண்ணாமலை. (௮௬)

போதமுற்றமெய்யடியார்புந்தியிலேரோட்டிப்
பாதமுச்சிமட்டாய்ப்படர்ந்தமலை—நாதத்
தழைக்குமலையலைபர்தபோதனைவாவென்
றழைக்குமலையண்ணாமலை (௮௭)

முப்போதும்பூசித்துமோசித்துப்போற்றுமவர்
கப்போதுமுன்னின்றருளுமலை—யெப்போதுந்
தாய்க்குமினிதானமலைசற்குருவாய்நாயேற்கு
வாய்க்குமலையண்ணாமலை. (அஅ)

காலையுதைத்தமலைகையில்மான்சூலமலை
வேலையிடமறிந்தும்வெற்றிமலை—மாலை
யணிசேருநீண்முடிமேலங்கரவமீன்ற
மணிசேருமண்ணாமலை, (அகூ)

மாறுபட்டதக்கனுயிர்மாய்த்தமலைமாலயற்கு
நீறுபட்டசெந்தழலாய்நின்றமலை—கூறுங்கா
லொப்பனைகளில்லாதுயர்ந்தமலைநீண்முடிமே
லப்பணியுமண்ணாமலை. (கூய)

பச்சைநிறத்தானாகிப்பாதிவடிவானமலை
கச்சையெனக்கட்செவியைக்கட்டுமலை- நிச்சயமா
ய், மாணுமடியேனையாளாவகையருளி
யாளுமலையண்ணாமலை. (கூக)

மானொருகைவெற்றிமழுவொருகையானமலை
ஞானமுனிவோர்க்கணித்தநாடுமலை—யானே

யுரித்தமலையம்மையுமைபாலேயார்க்கு
மருந்துமலையண்ணாமலை. (௧௨)

முல்லைமலர்க்கொன்றைமுடிமேலணிந்தமலை
யெல்லையிலாமாதவர்களேத்துமலை—தில்லையிலே
நட்டமலைமுப்புரத்தைநாடுமென்பர்மூவரைவிட்
டட்டமலையண்ணாமலை. (௧௩)

எல்லாருங்காணற்கினியமலையென்னுடைய
பொல்லாவினையிருக்கப்போந்தமலை—சொல்லா
ரும்,நல்லமலைபொல்லாரைநாசமுறப்பார்க்கைக்
கு,வல்லமலையண்ணாமலை (௧௪)

ஆழிநெடுமாலயர்க்குமரிதானமலை
யூழின்வினையன்பகர்கொழிக்குமலை—யாழியிலே
நஞ்சழலைக்கண்டுநடுங்கினரைக்காக்குமலை
யஞ்சமுகத்தண்ணாமலை (௧௫)

எத்திசையுந்தோற்றமலையேறுகந்துநின்றமலை
சித்திவரமீந்தருளிச்செய்யுமலை—முத்தர்மனம்
பூணுமலையண்டர்புகழுமலைநீண்டதொரு
மாணுமலையண்ணாமலை. (௧௬)

வன்மைக்குணத்தவரைமாதவரை வத்தடைந்தோ
ர், தம்மைத்தாளராமாற்றுங்குமலை—புன்மை
பொருந்துமலைவிண்ணவர்கள் போகாமலால
மருந்துமலையண்ணாமலை; (௧௭)

வானத்துப்பூந்தருவைவாங்கிக்களிறுபிடி
யானைக்குநீட்டியணையுமலை—ஞானத்த
ருன்னுமலையெந்நாளுமோனமச்சிவாயகுரு
மன்னுமலையண்ணாமலை. (௧௮)

அறியாதமுத்தியளிக்குமலையன்பர்க்
கொழியாவினையையொழித்துக்—கழியாத
வேற்றுப்பிறப்பையினியவமையுமென்றதுளி
மாற்றுமலையண்ணாமலை. (௧௯)

பொற்றங்கனிற்குன்றிப்பெய்வனையுந்தானுமெ
ன்றன்,குற்றங்களைந்தருளிக்கொண்டமலை-நித்தம்
புதியமலைகங்கையணிபொற்சடைமேல்வைத்த
மதியமலையண்ணாமலை. (௨௰)

அண்ணாமலைமாலையானதமிழ்வெண்பாவாற்
றன்னுருமைந்தெழுத்தைச்சாற்றிய நூற்- புன்னை

கக்,கற்றவர்கள்கேட்டவர்கள்காசினியிற்பேரின்ப
முற்றலகைபாள்வருவந்து. (௱௧)

மன்னுதிருவண்ணாமலையைவலமாகவந்துதான்
ஞான்னுதிருவைந்தெழுத்தையோதினேன் - றென்
னருணை,நாயகத்தைக்கோவிலிலேநான்கண்டேன்
பெற்றெடுத்த,தாயகத்தைக்கண்டவர்போற்றும்()

அண்ணாமலைவெண்பா

முற்றிற்று.